**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி**

**அ.வ.எண்.25/2018**

இந்நீதிமன்ற எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பு 1ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2026 ஆண்டு ஜுன் மாதம் 11 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : சாந்தி | மதம் | : இந்து |
| க/பெ | : அர்ஜுனன் | ஜாதி | : -- |
| வயது | : 44 | கிராமம் | : தெக்களூர் |
| தொழில் | : கூலி | வட்டம் | : திருத்தணி |

**11.06.2026**

**வா.சா. 1 திரும்ப அழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

11. என் அப்பா குப்பன் என்பவர் இறுதியாக 26E பஜார் தெரு அனுமந்தபுரம் என்ற விலாசத்தில் வசித்து வந்தார் என்றால் இல்லை. என் அப்பா இறுதியாக எங்கு வசித்தார் என்றால் தெக்களூரில்தான் வசித்தார். 1999ல் அனுமந்தபுரத்தில் இருந்தார் என்றால் இல்லை. கற்பகம், சிவகாமி என்ற இரு பெண்மக்கள் என் சித்தி கன்னியம்மாளுக்கு உள்ளார் என்றால் ஆமாம். கன்னியம்மாள்தான் முதல் மனைவி என்றாலும் ஜீவரத்தினம்மாள் எனது அப்பாவிற்கு மனைவியே இல்லை என்றால் சரியல்ல. குப்பன் இறந்த தேதி தெரியுமா என்றால் ஞாபகமில்லை. என் அப்பா இறந்த போதே பதிவு செய்தோமா என்றால் 3 மாதம் கழித்து பதிவு செய்தோம்.

12. வா.சா.ஆ 14 வாரிசு சான்றிதழில் ஜீவரத்தினம்மாள், கன்னியம்மாள் மட்டும்தான் குறிப்பிட்டுள்ளோம் என்றாலும் யார் முதல் மனைவி, இரண்டாம் மனைவி என்று குறிப்பிடவில்லை என்றாலும் ஜீவரத்தினம்மாள்தான் முதல் மனைவி ஆவார். குப்பன் மற்ற சில சொத்துக்களை விற்றுள்ளார் என்றால் எனக்கு தெரியாது. அவ்வாறு விற்ற சொத்துக்களுக்கு நாங்கள் வில்லங்கம் போட்டு பார்க்கவில்லை என்றால் எனக்கு தெரியாது. 05.11.1999ல்

சொத்துக்களை என் அப்பா குப்பன் விற்றுள்ளார் என்றாலும் அதை நான் இந்த வழக்கில் மறைத்துள்ளேன் என்றாலும் சரியல்ல. நாங்கள் வாரிசு சான்றிதழை எவ்வளவு நாட்கள் கழித்து வாங்கினோம் என்றால் ஒரு வருடத்திலேயே வாங்கிவிட்டோம்.

13. குப்பனின் நேரடி வாரிசுகளிடமிருந்து 4ம் பிரதிவாதி கிரையம் பெற்றுள்ளார் என்றாலும் அவர் முறையாக கிரையம் பெற்றதால் அந்த கிரைய ஆவணம் தள்ளுபடி செய்ய கோர இயலாது என்றால் சரியல்ல. நான் காலம் தாழ்த்தி ஆவணங்களை தயார் செய்துவிட்டு இந்த பொய் வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. ஆவண எண்.5531/2009லேயே சட்டப்படியாக எழுதப்பட்ட ஆவணத்தின் அடிப்படையில் வழக்கு சொத்தை 4ம் பிரதிவாதி கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ 3 ஆவணத்தில் கிருஷ்டம்ம நாயுடு மகன் தெலுங்கில் கையெழுத்து செய்துள்ளார் என்றால் எனக்கு அந்த ஆவணம் பற்றியே தெரியாது. முறையான சட்ட விதிகளுக்குட்பட்டு வா.சா.ஆ 3 பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

(குறுக்கு விசாரணை 1, 2 பிரதிவாதிகள் தரப்பில் ஒத்திவைக்கப்படுகிறது)